# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.. 142/2016 தேதி- 19.02.2026

(D.W.1) . ரெதி

## குறுக்கு விசாரணை

பட்டிகை சொத்தின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா அல்லது எனது அம்மா சொல்லிக்கொடுத்து தெரியுமா என்றால் நேரடியாகவும் தெரியும் எனது அம்மா சொல்லிக்கொடுத்தும் தெரியும். பட்டிகை சொத்தை வாதிக்கு விலைக்கு கொடுத்தது யார் என்றால் எனக்கு தெரியாது. வாதி எத்தனை வருடங்களாக அனுபவித்து வருகிறார் என்றால் 30 வருடங்களாக அனுபவித்து வருகிறார். வாதியின் சொத்தின் வடக்கு பக்கம் எனது சொத்து உள்ளது. எனது சொத்திற்கும் வாதி சொத்திற்கும் இடையில் முள்கம்பி வேலியோ காம்போண்ட் சுவரோ இருக்கிறதா என்றால் மண்சுவர் இருந்தது தற்போது இல்லை. 10, 15 வருடங்களாக இல்லை. எனது சொத்தையும் வாதியின் சொத்தையும் பிரிக்கக்கூடிய இடம் நேராக உள்ளதா அல்லது வளைந்து காணப்படுகிறதா என்றால் நேர் கோட்டில் உள்ளது.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தை நான் பார்க்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் ரோஸ் நிறத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும் சொத்து என்னுடைய சொத்து. அதன் தெற்கு பக்கம் 25/7 ல் இருப்பது வாதியின் சொத்து என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அவர் தாக்கல் செய்த வரைபடத்தில் எனது சொத்திற்கும் வாதியின் சொத்திற்கும் இடையே நேர் கோட்டில் இல்லாமல் வளைவாக பி பட்டிகை சொத்தை காண்பித்துள்ளார்

என்றால் சரியல்ல நேராகத்தான் காண்பித்துள்ளார். எனது சொத்திற்கும் வாதியின் சொத்திற்கும் இடையே 4 வளைவுகள் உள்ளது அதை நீதிமன்ற ஆணையர் காண்பித்துள்ளார் என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு தென்கிழக்கு மூலையில் ஒரு கல் இருக்கிறது என்றால் சரிதான். தெற்மேற்கு மூலையில் எல்லைகல் இல்லை என்றால் சரிதான். பி பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் எல்லைக்கல் இருந்தது அதை வாதி அப்புறப்படுத்திவிட்டார்.

வழக்கு தாக்கல் செய்யும்போது எனது சொத்திற்கும் வாதியின் சொத்திற்கும் இடையில் எல்லைக்கல் இருந்ததா என்றால் தென்கிழக்கு பகுதியில் ஒரு எல்லைக்கல்லும் நடுப்பகுதியிலும் ஒரு எல்லைக்கல் இருந்தது. எனது சொத்தையும் வாதியின் சொத்தையும் பிரிப்பதற்கு தென்கிழக்கில் உள்ள கல்லைத்தவிர வேறு கற்கள் இல்லை. ஆகையால் எனது கண்டத்தையும் வாதியின் கண்டத்தையும் நீதிமன்ற ஆணையர் மூலம் பிரித்து திட்டப்படுத்த வேண்டும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் காண்பித்திருக்கும் அளவுபடி 2 கண்டத்தையும் திட்டப்படுத்த எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. வாதியின் கண்டத்தில் நாங்கள் போகவேண்டிய தேவையில்லை.

எனது சொத்தின் கிழக்கு பாகம் சாணல் போகிறதா என்றால் சரிதான். சாணலின் கிழக்கு பக்கம் தார்ரோடு உள்ளது. சாணலுக்கும் எனது மற்றும் வாதியின் சொத்திற்கு இடையில் என்ன உள்ளது என்றால் சாணல்கரை உள்ளது. சாணலை கடக்க எனது சொத்திலிருந்து எப்படி செல்லமுடியும் என்றால் வாதியின் சொத்தின் கிழக்கு பக்கத்திலிருந்து சாணலின் குறுக்கே மின்கம்பம் 2 துண்டுகளாக

போடப்பட்டுள்ளது. தண்ணீர் போகும் சமயத்தில் மனிதர்கள் அந்த சாணலை கடக்க கஷ்டமாக இருக்கும் என்றால் பெரிதாக கஷ்டமாக இருக்காது. லாரியோ டெம்போவோ எதுவரை வரும் என்றால் சாணலுக்கு கிழக்கு பக்கமுள்ள ரோடுவரை வரும். அயனிமரத்தை முறித்தது யார் என்றால் நான்தான் முறித்தேன் வீட்டு தேவைக்காக. முறித்து வைத்த துண்டுகளை எங்கு அடுக்கி வைத்தோம் என்றால் என்னுடைய சொத்தின் கிழக்கு மூலையில் 5 துண்டுகள் அடுக்கி வைத்தோம். ஒவ்வொரு துண்டுகளும் எவ்வளவு நீளம் என்றால் ஒன்று 6 அடி நீளம் மற்ற அனைத்தும் 5 அடி நீளம் கொண்டது. நான் கூறுவதுபடி 28 அடி நீளம் கொண்ட மரமாக இருக்கும் என்றால் எவ்வளவு நீளம் இருக்கும் என்று எனக்கு சரியாக தெரியாது 28 அடி இருக்கலாம்.

மரத்தை நான்காக வெட்டினோம். மரத்தை வெட்ட 6, 7 நபர்கள் சேர்ந்து வெட்டினார்கள். மரத்தை முறித்தவர்கள் யார் என்று தெரியாது. மரத்தின் சுற்றளவு எவ்வளவு என்றால் 80 இஞ்ச். முறிக்கப்படாமல் நிற்கும் அயனி மரத்தின் நீளம் எவ்வளவு என்றால் மேற்படி மரத்தைவிட சிறியதாக இருக்கும். நீதிமன்ற ஆணையர் முறிக்கப்பட்ட மரத்திற்கு எவ்வளவு நீளம் குறிப்பிட்டுள்ளார் என்றால் 40 இஞ்ச் வீதி என கூறியுள்ளார் என்றால் தெரியாது. 40 இஞ்ச் வீதிஇருக்குமானால் 125 இஞ்ச் சுற்றளவு இருக்கும் என்றால் எனக்கு சரியாக தெரியாது. 100 வருடம் பழமையான மரம் என்பதால் பெரிய மரமாகத்தான் இருக்கும். எனக்கு 30 வருடங்களாக அங்கு இருக்கும் மரத்தைப்பற்றி தெரியும்.

வெட்டப்பட்ட அயனி மரத்திற்கு வேர்பகுதி வெளியே தெரியும்படி இருந்ததா என்றால் அவ்வாறு இல்லை. வாள் வைத்து முறித்து எடுத்தார்களா அல்லது வெட்டி எடுத்தார்களா என்றால் வாள் வைத்து அறுத்து எடுத்தார்கள். எலக்ரிக் வாளால் முறித்து எடுத்தார்கள் என்றால் சரிதான். எலக்ரிக் வாள் கொண்டு முறிக்க எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டது என்றால் நேரம் சரியாக தெரியாது. நான் சொல்வதுபோல் அங்கு ஒரு மரம் இல்லை என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் கூறியபடி அளவுகளுடன் மரங்கள் இருந்தால் 4 அல்லது 8 நபர்களால் எடுத்து மாற்ற முடியாது என்றால் இரவோடு இரவாக வாதி முறித்து வைத்த மரங்களை எடுத்து சென்றுவிட்டார். நான் வழக்கு பட்டிகை சொத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் உள்ளேன். காலையில் 07.00 மணிக்கு வழக்கு பட்டிகை சொத்திற்கு செல்லும்போது அங்கு முறித்து வைக்கப்பட்ட மரங்கள் இல்லை. வாதி என்னிடம் வந்து விலைக்கு கேட்டார் நாங்கள் கொடுக்கவில்லை அதனால்தான் வாதி தடியை எடுத்து சென்றுவிட்டதாக கூறுகிறேன். நானே முறித்து எடுத்து சென்றுவிட்டு தற்போது வாதி எடுத்துவிட்டதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

40 இஞ்ச் சுற்றளவு கொண்ட மரம் அதை நான்தான் எடுத்தேன் என்றால் சரியல்ல. முறிக்கப்பட்ட மரத்தின் கனஅடி எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மரத்தை விற்கவேண்டுமென்றால் கனஅடிக்குத்தான் விற்பனை செய்வார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் 1 1/2 லட்சம் என்று கூறுகிறேன் என்றால் முன்பு கொடுக்கப்பட்ட தடி அவ்வளவு விலை போனதால்

தற்போதும் அந்த விலை பெறும் என்று 1 1/2 லட்சம் கேட்டுள்ளேன். அயனி மரத்திற்கு 350 ரூபாயிலிருந்து 500 ரூபாய் கன அடிக்கு கொடுக்கப்படும் என்றால் முறிக்கப்பட்ட நேரத்தில் இதைவிட கூடுதல் விலைபெறும்.

நானே மரத்தை முறித்து கொண்டு சென்றுவிட்டு வாதி வழக்கு தாக்கல் செய்ததால் அதற்காக எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறிய அளவுகளுடன் கூடிய மரங்கள் இருந்தால் இரவில் சாணலைத்தாண்டி எடுத்து செல்ல முடியாது என்றால் சரியல்ல. ஜேசிபி வைத்து எடுத்து லாரியில் இரவு 12.30 மணிக்கு எடுத்து சென்றார்கள். ஜேசிபியின் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. லாரியின் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. மரத்தை நான் முறித்துவிட்டு அதை வாதி எடுத்து சென்றதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி வேலி அமைக்க சொல்லி வழக்கு தாக்கல் செய்ததால் நான் பொய்யாக எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மரத்தைப்பற்றி வேறு யாருக்காவது தெரியுமா என்றால் அனைவருக்கும் தெரியும். நான் பொய் தர்க்கம் செய்கிறேன் என்றால் சரியல்ல.